<u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ சார்வரி வருடம் ஆனி மாதம் 16–ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு ஜுன் 30–ம் தேதி) புதன் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சென்னுகிருஷ்ணன்,எம்.ஏ.,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**<u>பொருள் எண்..1</u>**

இந்நகராட்சியின் 2020–2021–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்..140/2010/சி1) |

**தீர்மானம் எண்..91 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..2</u>**

2021–2022–ஆம் ஆண்டிற்கான சொத்து வரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில் வரி ஆகிய இனங்களுக்கான கேட்பு அச்சிட்டு வரிவிதிப்புதாரர்களுக்கு சார்வு செய்ய வேண்டியுள்ளது. அதன்பொருட்டு மேற்கண்ட இனங்களுக்கு 33 வார்டுகளுக்கும் வரியினங்களுக்கான கேட்பு பிரிண்ட் எடுத்து வழங்குவதற்கு செராக்ஸ் மிஷின் இல்லாத காரணத்தினால் பிரிண்ட் எடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, பணியின் அவசர, அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதிவழங்கலாம். |
| | 2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1985/ 2012/அ1) |

**தீர்மானம் எண்..92 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..3</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியின் நிதி நிலையினை பெருக்கும் வகையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்..1 முதல் 33 முடிய சாலை ஓரங்களில் தரைக்கடை வைத்து வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளிடமிருந்து 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 270ன் கீழ் கீழ்க்கண்ட விபரப்படி நிபந்தனைகளுக்குட்பட்டு தரைக்கடை கட்டணம் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | தரைக்கடை விபரம் | நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | செருப்புக்கடை (50 சதுர அடி வரை) | 5/– |
| 2. | செருப்புக்கடை (50 சதுர அடிக்கு மேல்) | 10/– |
| 3. | செருப்புக்கடை (100 சதுர அடிக்கு மேல்) | 20/– |
| 4. | தள்ளுவண்டியில் வைத்து பழம் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் கடை (50 சதுர அடி வரை) | 10/– |
| 5. | தள்ளுவண்டியில் வைத்து பழம் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் கடை (50 சதுர அடிக்கு மேல்) | 20/– |
| 6. | தள்ளுவண்டியில் வைத்து பழம் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் கடை (100 சதுர அடிக்கு மேல்) | 30/– |
| 7. | தரையில் வைத்து காய்கறி, பூ வியாபாரம் (50 சதுர அடி வரை) | 10/– |
| 8. | தரையில் வைத்து காய்கறி, பூ வியாபாரம் (50 சதுர அடிக்கு மேல்) | 20/– |
| 9. | தரையில் வைத்து காய்கறி, பூ வியாபாரம் (100 சதுர அடிக்கு மேல்) | 30/– |
| 10. | தரையில் வைத்து பிளாஸ்டிக் மற்றும் சில்வர் சாமான்கள் விற்பனை (50 சதுர அடி வரை) | 10/– |
| 11. | தரையில் வைத்து பிளாஸ்டிக் மற்றும் சில்வர் சாமான்கள் விற்பனை (50 சதுர அடிக்கு மேல்) | 20/– |
| 12. | தரையில் வைத்து பிளாஸ்டிக் மற்றும் சில்வர் சாமான்கள் விற்பனை (100 சதுர அடிக்கு மேல்) | 30/– |
| 13. | தரையில் வைத்து இதர பொருட்கள் விற்பனை (50 சதுர அடி வரை) | 10/– |
| 14. | தரையில் வைத்து இதர பொருட்கள் விற்பனை (50 சதுர அடிக்கு மேல்) | 20/– |
| 15. | தரையில் வைத்து இதர பொருட்கள் விற்பனை (100 சதுர அடிக்கு மேல்) | 30/– |

<u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1. | மேற்கண்ட கடைகளை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் கடைகளைஅமைத்துக்கொள்ளவேண்டும். |
| 2. | நகராட்சிக்கு கட்டணம் செலுத்துவதை முன்வைத்து கடைகள் போடப்படும் இடத்திற்கு உரிமை கோர இயலாது. |
| 3. | முற்றிலும் தற்காலிக கடைகள் என்பதால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகராட்சியால் எந்த நேரத்திலும் கடைகளை அகற்றுவதற்கு நகராட்சிக்கு உரிமை உண்டு. |
| 4. | மேற்படி கட்டணம் வசூல் செய்வதற்கு ஏலம் விடப்படும் நேர்வுகளில் ஏல வைப்புத் தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.<br><br>1) ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல பொறுப்புத் தொகை ரூ. 2,00,000/–<br><br>2) சொத்து மதிப்பு சான்றிதழ் தாக்கல்செய்யவேண்டியது தொகை ரூ.3,00,000/–<br><br>3) சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. 2,00,000/– |
| 5. | இந்நகர்மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 29.01.2021– ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்..8–ல் கண்டுள்ள குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் தொடர்பான பொது ஏல நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும். |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) இப்பொருள் தொடர்பான இதர செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இந்நகராட்சியின் 2021–2024–ம் வருடத்திய குத்தகை மற்றும் ஏல விதிகளில் 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவு 270ன் கீழ் கட்டணம் வசூல் செய்வதை சேர்க்கவும் மேற்கண்ட நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3)மேற்கண்ட கடைகளுக்கு பண்டிகை நாட்களில் இரட்டிப்பாக வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..1034/2013/அ2) |

**தீர்மானம் எண்..93 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..4</u>

இவ்வலுவலக அனைத்து பிரிவு இருக்கை அலுவலர்கள் பணியின் நிமித்தமாக 2021–2022–ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பேப்பர் (Stationery) கணினி பிரிவு பயன்படுத்துவதற்கான Toner பண மதிப்புடைய படிவங்கள் துறை மூலம் வசூல் செய்யப்படும் டோக்கன்கள், அம்மா உணவகம் விற்பனைக்குரிய டோக்கன்கள், பதிவேடுகள் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மேற்கண்ட பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மற்றும் அரசு சார்பு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..1671/2021/பி2) |

**தீர்மானம் எண்..94 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

## பொருள் எண்..5

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் அன்றாட தூய்மைப்பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு ஆகிய ஐந்து குழுக்களின் உறுப்பினர்கள் கொண்டு தூய்மைப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைந்ததாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர். தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின் தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதேபோன்று நகர்மன்ற தீர்மானம் எண்..430/29.5.2018, 502/20.9.2018, 560/30.11.2018, 73/31.5.2019, 312/13.11.2019, 419/25.2.2020, 443/30.4.2020, 479/30.6.2020, 529/31.8.2020, 557/29.10.2020, 574/31.12.2020 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்..67, நாள்.. 31.05.2020ல் உரிமக் காலத்தினை 01.04.2021 முதல் 30.06.2021 வரை நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டதன் உரிமக் காலம் 30.6.2021உடன் முடிவடைவதன் பொருட்டு தற்பொழுது திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின் அவசியம் கருதி கூடுதலாக 01.07.2021 முதல் 30.9.2021 வரை உரிமம் நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.45.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.‘

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.07.2021 முதல் 30.09.2021வரை வரை 3 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்திடவும், 2020–2021–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) உத்தேச செலவு தொகை ரூ.45.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். |
| | 4) திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.7150/2015/எச்1) |

**தீர்மானம் எண்..95 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..6**

அரசாணை எண்..166, நாள்.. 23.11.2016–ன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் 14 எண்ணிக்கை மற்றும் 4 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்களில் தினசரி துாய்மைப் பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக் குழுவான பனிமலர் குழு மூலம் 20 நபர்கள்கொண் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நகர் மன்றம் தனது தீர்மான எண்..61, நாள்.. 30.3.17ன்படியும் நகர்மன்ற தீர்மான எண்..370, நாள்..28.3.2018ன்படியும் அனுமதி வழங்கிய உரிம காலம் 31.3.19 உடன் முடிவடைந்த நிலையில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..62, நாள்.. 31.05.19ன்படி 31.03.2020 முடிய அனுமதி காலம் முடிவடைந்ததாலும், மேலும் 28.03.2020 முதல் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக அரசு உத்திரவு மூலம் பள்ளிகள் மூடப்பட்டது. தற்பொழுது 10 மற்றும் 12ம் வகுப்பு உள்ள பள்ளிகள் மட்டும் நடைபெறும் என அரசால் உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சி பகுதியில் உள்ள 3 அரசு மேல்நிலை பள்ளிகளில் மட்டும் துாய்மைப்பணி மற்றும் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதால், ஏற்கனவே பணி செய்து வந்த பனி மலர் சுய உதவிக்குழு மூலம் 5 நபர்களை 3 பள்ளிகளுக்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.. 18, நாள்.. 29.01.2021ன்படி 19.01.2021 முதல் 31.03.2021 முடிய மூன்று மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொண்டதற்கான உரிமக்காலம் நிறைவடைந்ததன் பொருட்டு, மேலும் 01.04.2021 முதல் 30.06.2021 முடிய 3 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..68, நாள்.. 31.05.2021–ன்படி அனுமதி வழங்கியதன் உரிமக்காலம் 30.6.2021உடன் முடிவடைவதன் பொருட்டு மேற்படி பணிக்கான உரிமக்காலத்தினை 01.07.2021 முதல் 30.09.2021 வரை நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2)அன்றாட சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..8792/2016/எச்1) |

**தீர்மானம் எண்..96 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சம்மந்தமான பதிவுகளானது புதிய இணையதளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவரும் பணிக்கு நகர்மன்றம் தீர்மான எண்..36, நாள்.. 30.03.2017 நகர்மன்ற அனுமதி வழங்கிய உரிம காலம் 28.02.2018 உடன் முடிவடைவதால், இப்பணியை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்..369, நாள்..28.3.2018 வரை அனுமதி வழங்கிய உரிமக் காலம் 31.3.2019 உடன்

முடிவடைவதால், இப்பணியினை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தீர்மானஎண்..60, நாள்.. 31.05.2019ன்படி அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.03.2020உடன் முடிவடைவதால், மேலும் நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..432, நாள்.. 30.03.2020 மற்றும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..478/ 30.6.2020, 528/31.8.2020, 554/29.10.2020, 577/31.12.2020 மற்றும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..65, நாள்.. 31.05.2021—ன்படி மேற்படி பணிக்கான உரிமக் காலங்களை 30.6.2021 வரை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிமம் 30.6.2021உடன் முடிவடைவதன் பொருட்டு, இப்பணிக்கான உரிமத்தினை 01.7.2021 முதல் 30.9.2021 வரை நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 30.06.2021 உடன் நிறைவடைவதால் 01.07.2021 முதல் 30.09.2021 வரை 3 மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020—2021—க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.0.80இலட்சம் பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 4) மேற்படி பணியின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..839/16/எச்1) |

**தீர்மானம் எண்..97 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..8</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் JCB மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு 2 ஓட்டுநர்கள்மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகித அடிப்படையில் விவேகானந்தா தொண்டு நிறுவனம், பட்டுக்கோட்டை அவர்கள் மூலம் பெற்று ஓட்டுநர் பணிபுரிந்திட நகர்மன்றம் தீர்மான எண்..122, நாள்.. 10.06.2016ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திட புதுப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உரிமத்தினை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தீர்மான எண்..144, நாள்.. 19.06.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக்காலம் 31.03.2019உடன் முடிவடைவதால், இப்பணிக்கான உரிமக் காலத்தினை நகர்மன்றம் தீர்மான எண்..74, நாள்.. 31.05.2019 மற்றும் நகர்மன்றம் தீர்மான எண்..431/30.3.2020, 480/30.6.2020, 530/31.8.2020, 555/29.10.2020, 575/31.12.2020 மற்றும் 66/31.5.2021ன்படி உரிமக் காலங்களை 30.06.2021 முடிய நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அத்தியாவசியம் கருதி உரிமக் காலத்தினை 01.07.2021 முதல் 30.9.2021 வரை 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான உத்தேசசெலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | **1)** மன்றம் அனுமதிக்கலாம். |
| | **2)** மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் **31.06.2021** உடன் நிறைவடைவதால் **01.07.2021** முதல் **30.09.2021** முடிய மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை **2020–2021–**க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும், அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | **3)** அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்..6517/2014/எச்1)** |

**தீர்மானம் எண்..98 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..9</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டிஎன்.49CZ 3226, 3225, 3204, 3242, 3262, 3263, 3285, 3234, 3237 ஆகிய 9 எண்ணிக்கை டாடா ஏ.சி. வாகனங்களுக்கு 2021–22–ம் ஆண்டிற்கு 5454 தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும்பொருட்டு மேற்படி வாகனங்களில் கீழ்க்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

| வ.எண் | **பணியின் விபரம்** |
|---|---|
| **1.** | வண்டி முழுவதும் வாட்டர் சர்வீஸ் செய்தல் |
| **2.** | கிளட்சு பிளேட், கவர் அசெம்பிள் புதிதாக மாற்றவேண்டும். |
| **3.** | ஜாய்ண்ட் கிராஸ் புதிதாக மாற்றவேண்டும் |
| **4.** | ரேடியேட்டர் கவர் ஆயில் மாற்றவேண்டும் |
| **5.** | புதிதாக 3 பேட்டரி மாற்றவேண்டும் |
| **6.** | புதிதாக 4 டயர்கள் மாற்றவேண்டும் |
| **7.** | நான்கு வீல்களுக்கும் கிரீஸ் பேக் செய்து பேரிங் மாற்ற வேண்டும். |
| **8.** | வண்டி முழுவதும் டிங்கரிங் வேலை செய்யப்பட வேண்டும். |
| **9.** | வண்டி முழுவதும் பெயிண்டிங் அடிக்கவேண்டும் |
| **10.** | ஆக்ஸிலேட்டர் கேபிள் புதிதாக மாற்றவேண்டும் |
| **11.** | நான்கு வீல்களும் அலாய்மெண்ட் பார்க்க வேண்டும். |
| **12.** | வண்டி முழுவதும் எண்டு பால் மாற்றவேண்டும் |
| **13.** | தகுதி சான்று மற்றும் ஸ்டிக்கர் ஒட்டித்தர வேண்டும். |
| **14.** | எலக்ட்ரிக்கல் வேலை செய்யப்பட வேண்டும். |

ஆகவே மேற்படி வாகனங்களுக்கு 2021—22ம் ஆண்டிற்கு தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும் பொருட்டு மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.5,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் கீழ் வீடுகள் தோறும் குப்பைகளை சேகரம் செய்யும் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்படி வாகனங்களின் பராமரிப்பு பணியினை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந.க.எண்.. 1726/2021/எச்1) |

**தீர்மானம் எண்..99 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..10</u>

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 9 எண்ணிக்கை டாடா ஏ.சி வாகனத்திற்கு 2021—2022—ம் ஆண்டிற்கு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 22.06.2021—ம் தேதியன்று 3 ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தார் பெயர் | ஒப்பந்தப்புள்ளி ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 9 எண்ணிக்கை டாடா ஏசி வாகனத்திற்கு 2021—2022—ம் ஆண்டிற்கு தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் . | 5,50,000/— | ஹரிஹரன் ஆட்டோ சர்வீஸ், பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை | ரூ.5,32,420/- |
| | | | நேதாஜி ஆட்டோ கேரேஜ், பெருமாள் கோவில் தெரு அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை | ரூ.6,52,375- |
| | | | சாந்தி ஆட்டோ கேரேஜ், 187, அறந்தாங்கி ரோடு, பட்டுக்கோட்டை. | ரூ.6,77,030/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வரிசை எண்..1—ல் காணும் ஹரிஹரன் ஆட்டோ சர்வீஸ், பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை நிறுவனம் அளித்துள்ளது. மேலும் வரிசை எண்..2 மற்றும் 3ல் காணும் நிறுவனத்தாருக்கு ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளது. எனவே, ஹரிஹரன் ஆட்டோ சர்வீஸ், பண்ணவயல் ரோடு, பட்டுக்கோட்டை நிறுவனத்தாருக்கு ஒப்பந்தப்புள்ளியனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1726/2021/எச்.1) |

**தீர்மானம் எண்..100 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..11</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் உருவாகி அதனால் பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு (DBC) பணிகள் மேற்கொள்ள துப்புரவு கோட்டம் 1,2,3க்கும் சேர்த்து 60 நபர்கள் பணியமர்த்தி களப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்..69, நாள்.. 31.05.2021ன்படி அனுமதி வழங்கப்பட்டதன் உரிமக்காலம் 30.6.2021 உடன் முடிவடைவதன் பொருட்டு டெங்கு தடுப்பு பணியின் அவசர, அவசியம் கருதி மேற்படி பணிக்கான உரிமக் காலத்தினை 01.07.2021 முதல் 30.09.2021 முடிய 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும், மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.21,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணிகளை மகளிர் சுய உதவிக்குழுக்கான கோட்டம்—1க்கு சமத்துவ மகளிர் சுய உதவிக்குழு, ஆனைவிழுந்தான் குளத் தெரு, பட்டுக்கோட்டை கோட்டம்—2—க்கு அதிர்ஷ்ட லெட்சுமி மகளிர் சுய உதவிக்குழு, வெண்டாக்கோட்டை ரோடு, வளவன்புரம், பட்டுக்கோட்டை கோட்டம்—3—க்கு அம்மன் சுய உதவிக்குழு, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **<u>அலுவலக குறிப்பு..</u>** | 1) மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். |
| | 2) டெங்கு தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..4032/2019/எச்1) |

**தீர்மானம் எண்..101 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..12</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் சாந்தாங்காடு, கொண்டிக்குளம், மாட்டுச்சந்தை என மூன்று நீரேற்று நிலையங்கள் மற்றும் அதற்கான 12 மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டிகள் மேலும் 65 மினி பவர்பம்ப் மோட்டார்கள் தினம் இயக்கப்பட்டு வருகிறது. இவைகளை இயக்குவதற்கு நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் தற்போழுது போதிய அளவு இல்லாமல் உள்ளது. மேற்கண்ட பணிகளை தினசரி இரவு, பகல் என இரு வேளையும் பணிபுரிவதற்கு

கூடுதலாக 8 நபர்கள் தேவைப்படுகிறார்கள். மேற்படி 8 நபர்கள் தினக்கூலி அடிப்படையில் முறையில் தனியார் மூலம் குடிநீர் பணிக்கு வைத்துக் கொள்ளவும், அதற்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கிட நகர்மன்றம் தனது தீர்மான எண்..75, நாள்.. 31.05.2021—ன்படி அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.06.2021 உடன் முடிவடைவதன் பொருட்டு பொது மக்களின் அன்றாட குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி மேலும் ஆறு மாத காலத்திற்கு 01.07.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) மேற்படி பணிக்கான ஊதியத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களது தரப்படுத்தப்பட்ட 2019—2020—ஆம் ஆண்டிற்கான ஊதிய விகிதத்தின் அடிப்படையில் வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) மேற்படி பணிக்கான செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்..3397/2007/இ1) |

**தீர்மானம் எண்..102 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..13**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.23 பூமல்லியார் குளத்தினை தூர்வாரி அதன் சுற்று புறத்தில் உள்ள கரையினை சீர் செய்து உபரி மண்ணை கொண்டு bund Strengthening செய்யும் பணி சுவர் அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1206/ 2021 /இ1) |

**தீர்மானம் எண்..103 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..14**

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடங்களை ஆய்வு மேற்கொள்ள மத்திய மற்றும் மாநில பிரதிநிதிகள் வருகை புரியவுள்ள காரணத்தினால் சுகாதார பிரிவின் கீழ் கோட்டம்—1 மற்றும் கோட்டம்—3 ல்உள்ள கழிவறைகள் பழுதாகி உள்ளதால் மேற்படி சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிவறைகளை புணரமைப்பு செய்திட கீழ்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பட்டுக்கோட்டை நகராட்சி துப்புரவு பிரிவு கோட்டம்–1–ன் கீழ் செயல்பட்டு வரும் பொது கழிப்பறை மற்றும் சமுதாய கழிப்பறைகளை புனரமைப்பு செய்யும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.2.45 |
| 2 | பட்டுக்கோட்டை நகராட்சி துப்புரவு பிரிவு கோட்டம்–3–ன் கீழ் செயல்பட்டு வரும் பொது கழிப்பறை மற்றும் சமுதாய கழிப்பறைகளை புனரமைப்பு செய்யும் பணி மேற்கொள்ளுதல். | ரூ.2.45 |
| | மொத்தம் ரூ. | ரூ.4.90 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1).பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். |
| | 2). அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1209 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..104 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..15**

பட்டுக்கோட்டை நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாகும். இந்நகராட்சி 21.83 சதுர.கி.மீ. பரப்பளவு கொண்டது. இதில் 33 வார்டுகள் உள்ளன. 33 வார்டுகளில் தூய்மை பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 73,097 ஆகும். தற்சமயம் நடப்பு ஆண்டு மக்கள் தொகை 79215 ஆகும். இதில் 21174 குடியிருப்புகள் உள்ளன. இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் 120 ஆகும். இதில் தற்சமயம் 94 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை (த.ப.3) நாள்.30.04.1997 ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி 279 பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். அதன்படி கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசாணை 101 ன் படி தேவைப்படும் மொத்த பணியாளர்களின் கணக்கீடு விவரம்**

| வ.எண் | வேலை வகைப்பாடு | விபரம் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | 250 குடியிருப்புகளுக்கு 3 நபர் வீதம் மொத்தம் 21, 174 குடியிருப்புகளுக்கு | 21,174 / 250*3 | 254 நபர்கள் |
| 2) | சிறிய லாரி 3 நபர் வீதம் | 2*3 Nos | 6 நபர்கள் |
| 3) | டம்பர் பிளேசர் 2 நபர் வீதம் | 1*2 Nos | 2 நபர்கள் |
| 4) | காம்பேக்டர் லாரி 2 நபர் வீதம் | 2*2 Nos | 4 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 5) | JCB க்கு 1 நபர் வீதம் | 1*1 Nos | 1 நபர்கள் |
| 6) | கழிவுநீர் ஊர்தி 2 நபர் வீதம் | 1*2 Nos | 2 நபர்கள் |
| 7) | பேருந்து நிலைய கழிவறை சுத்தம் செய்ய | | 2 நபர்கள் |
| 8) | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய கிரேடு 4 நபர் வீதம் | | 4 நபர்கள் |
| 9) | உரக்கிடங்கு பராமரிப்பு 20 டன்க்கு மேல் 4 நபர்கள் வீதம் (நாள் ஒன்றுக்கு 30 டன்கள் வீதம்) | | 4 நபர்கள் |
| | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | | **279 நபர்கள்** |

**<u>அரசாணை 101 ன் படி தேவைப்படும் பற்றாக்குறை கூடுதல் பணியாளர்களின் கணக்கீடு விவரம்</u>**

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படி தேவைப்படும் மொத்த துாய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 279 நபர்கள் |
| 2) | அனுமதிக்கப்பட்ட நிரந்தர துாய்மை பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை | 120 நபர்கள் |
| 3) | தற்போது பணியில் உள்ள நிரந்தர துாய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 94 நபர்கள் |
| 4) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்..14927/பி3/2013, நாள்.. 11.06.2013ன்படி அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் 94 நபர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடித ந.க. எண்..28369/J3/நாள்.. 10.12.2018ன்படி அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் – 75 நபர்கள். | 126 நபர்கள். |
| 5) | தற்போது பணியில் உள்ள மொத்த பணியாளர்கள் (நிரந்தரம் / தனியார்) | 220 நபர்கள் |
| 6) | கூடுதலாக தேவைப்படும் துாய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | 279–220 = 59 நபர்கள். |
| 7) | அரசாணை எண்..101ன்படி தேவைப்படும் பணியாளர்கள் | 279 நபர்கள். |
| 8) | அனுமதி வழங்க வேண்டிய மொத்த துாய்மை பணியாளர்களின் பணியிடம். | 279–94=185 நபர்கள். |

நகராட்சியில் பணியிலுள்ள 94 நிரந்தர துாய்மை பபணியாளர்களை தவிர மீதமுள்ள 185 நபர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தனியார் மூலம் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். தற்பொழுது துாய்மை இந்தியா திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு 185 பணியாளர்களை Out sourcing முறையில்பணியமர்த்திக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி 185 பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

| **வ.எண்** | **ஊதிய விபரம்** | **மொத்தம்** |
|---|---|---|
| 1. | துாய்மை பணியாளர்கள் 185 X 520.89X 30 | 28,90,939 . 50 |
| 2. | மாதம் ஒன்றுக்கு | 28,90,939 . 50 |

எனவே ஆண்டு ஒன்றுக்கு (28,90,939 . 50x12 = ரூ.3,46,91,274/-) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி வழங்கும் உத்தேச செலவினம் ரூ.3,46,91,274/- ஆகும். தனியார் மூலம் தூய்மைப் பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் மூன்று ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.5252/18/எச்1

**தீர்மானம் எண்..105 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..16**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நவீன எரிவாயு தகன மேடை வளாகத்தில் உள்ள Exhaust blower, Venturi Scrubber Water Sprayer Servicing, replacement of 5HP Motor & bearings ,Pipeline ,Impeller Shaft ID blower to Chimney Connecting Pipe Manual door etc., போன்றவற்றை மாற்றிடவும், புணரமைப்பு பணி செய்திடவும், தற்போது கொரோனா காலம் என்பதால் பணிகளை அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள 24.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | **KGS industries No.18B,Thiruvallur street, Mannurpet, Padi,Chennai-50** | **Rs.1,76,410-** |
| 2 | **SGS Servces No.314,4th street, Ambethkar Nagar, kolathur Chennai-99** | **Rs.1,70,982-** |
| 3 | **Logeshwasri Industries, No.52, Tiny Sector 1st Main Road, Ambattur Industrial Estate, Chennai-58** | **Rs.1,73,932-** |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2– ல் காணும் நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியானது. மற்ற இரண்டு நிறுவனங்களின் விலை விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே **SGS Servces,Chennai** அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளிகளை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1).வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள **SGS Servces, Chennai** விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் பணி மேற் கொண்டதையும் மற்றும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

**தீர்மானம் எண்..106 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..17</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.31 பண்ணவயல் ரோடு கதவு எண்.172/297, லெட்சத் தோப்பு என்ற பகுதியில் வசிக்கும் திரு.T.நாடிமுத்து என்பவர் மழைநீர் வடிகால் அமைத்திட வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார்.விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள இடம் ஆய்வு செய்யப்பபட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக மழைநீர் வடிகால் அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட தோராய மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி வழங்கவும், இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பணி மேற்கொள்ள வேண்டிய விபரம்**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.31, பண்ணவயல் பிரதான சாலையில் அய்யா நகர் சந்து முதல் இரட்டை சாலை பேருந்து நிறுத்தம் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.4.00 |
| 2 | வார்டு எண்.31, ரெட்டை சாலை பேருந்து நிறுத்தம் முதல் இருப்பு பாதை அருகில் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் | ரூ.4.10 |
| | மொத்தம் ரூ. | ரூ.8.10 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1760/2021 /இ1) |

**தீர்மானம் எண்..107 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

<u>பொருள் எண்..18</u>

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோக பகிர்மான மற்றும் பிரதான குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (01.06.2021 முதல் 31.03.2022 வரை) பணியினை மேற்கொள்ளுவதற்கு 29.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோக பகிர்மான மற்றும் பிரதான குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (01.06.2021 முதல் 31.03.2022 வரை) | 4,50,000/– | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.02% குறைவு |
| | | | எஸ்.கணேசன், பட்டுக்கோட்டை. | 11.82 %அதிகம். |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினைவிட குறைவாக உள்ளது. ஆகவே கே. எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது,.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1696/2021/இ2) |

**தீர்மானம் எண்..108 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..19</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பருவமற்ற மழையினால் மற்றும் புரவி புயலினால் (Unseasonal rainfall) தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை ஆயில் இஞ்சின் மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு 20.01.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை ஆயில் இஞ்சின் மூலம் அப்புறப்படுத்தும் பணி | ரூ.50,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.16 % குறைவு |
| | | | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 1.20 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1574 /2021/இ.1) |

**தீர்மானம் எண்..109 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..20</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பருவமற்ற மழையினால் மற்றும் புரவி புயலினால் (Unseasonal rainfall) நகர் பகுதியில் சாலயில் சேதமடைந்துள்ள நிலையில் உள்ள Potholes யை WMM மூலம் நிரப்பிடும் பணி மற்றும் சீர்செய்தல் பணிக்கு 20.01.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | நகர் பகுதியில் சாலையில் சேதமடைந்துள்ள நிலையில் உள்ள Potholes யை WMM மூலம் நிரப்பிடும் பணி மற்றும் சீர்செய்தல். | ரூ.25,000/- | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 0.04 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.81 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள கே.எடிசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1574 /2021/இ.1) |

**தீர்மானம் எண்..110 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**<u>பொருள் எண்..21</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பருவமற்ற மழையினால் மற்றும் புரவி புயலினால் (Unseasonal rainfall) மழைகாலங்களில் விழுந்துள்ள மரக்கழிவுகள் , குப்பைகளை JCB வாகனம் மூலம் அள்ளி அப்புறப்படுத்தும் பணி 20.01.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | மழைகாலங்களில் விழுந்துள்ள மரக்கழிவுகள் , குப்பைகளை JCB வாகனம் மூலம் அள்ளி அப்புறப்படுத்தும் பணி. | ரூ.20,000/- | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.12% குறைவு |
| | | | கே.எடிசன் பட்டுக்கோட்டை | 0.35% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1574 /2021/இ.1) |

**தீர்மானம் எண்..111 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..22**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்..27 கரிக்காடு வடக்கு வெளி பகுதியில் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. தற்போது வழங்கும் குடிநீர் கரிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் வழங்கப்படுகிறது. இப்பகுதி மேடான பகுதியாகும். பகிர்மானக் குழாயின் கடைசி பகுதியாகும். அதனால் குடிநீர் சரியான அளவில் வழங்க முடியவில்லை. அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நம்ம டாய்லெட் ஆழ்குழாய் கிணறு 6 அடி விட்டமும் 400அடி ஆழமும் கொண்டது. அதனைப் பயன்படுத்தி அப்பகுதி குடிநீர் பற்றாக்குறையைப் போக்கவும், அதற்காக 7.5எச்.பி ஆழ்குழாய் கிணறு நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்துவதற்கு அதற்கான உபகரணங்கள் புதியதாக வாங்கவும், மதிப்பீடு ரூ.1.50லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.. 1696 /2021/இ2)

**தீர்மானம் எண்..112 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

**பொருள் எண்..23**

இந்நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் –2019 (Fecal sludge treatment Plant (FSTP)- ன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் 30 KLD கொள்ளளவு கொண்ட FSTP அமைக்கும் பணிக்கு M/s MSG Infra Thanjavur என்ற நிறுவனத்திற்கு 29.01.2019ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது ஆனால் நாளது தேதி வரை வேலையை முடிக்கப்பட வில்லை. M/s MSG Infra Thanjavur என்ற நிறுவனம் பணி உத்தரவினை நீட்டிப்பு செய்திட விண்ணப்பம் அளித்துள்ளார்கள், மேற்படி விண்ணப்பத்தில் கொரானா காலத்தில் வேலையாட்கள் பணிக்கு வருகை தராத காரணத்தாலும் ,இயற்கை இடர்பாடுகளால் மேற்கண்ட பணியை ஒப்பந்த காலத்திற்குள் பணியை முடித்து தர இயலவில்லை,ஆகையால் 30.8.2021–க்குள் பணியை முடித்து தர ஏதுவாக ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்து தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, பணி காலத்தை 30.8.2021 வரை நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | ‘மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4618/2018 /இ1) |

**தீர்மானம் எண்..113 ..அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது..**

ஒம்/கா.சென்னுகிருஷ்ணன்
தனி அலுவலர்/ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி